விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 313 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 11 வெள்ளிக்கிழமை (28.10.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




அஞ்ச வேண்டிய தேவையில்லை

# எந்த தேர்தலையும் எதிர்கொள்வோம்



## பெரமுன கூட்டத்தில் மகிந்த தெரிவிப்பு

(புத்தளம்)

தேர்தலைக் கண்டு அஞ்ச வேண்டிய தேவை எமக்கில்லை. எந்தத் தேர்தலையும் எந்த நேரத்திலும் எதிர்கொள்வதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம் என்று முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (11ஆம் பக்கம் பார்க்க)

## புலோலியில் வீடுடைத்து 35 பவுண் நகை திருட்டு

(கரணவாய்)

வடமராட்சியில் ஆசிரியை ஒருவரின் 35 பவுண் தங்க நகைகள் வீடு உடைத்து திருடப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

புலோலி, புற்றளை பகுதியில் உள்ள வீடொன்றிலேயே நேற்று வியா 11

## இந்திய பல்கலையில் பட்டம் பெற்றவர்களை


அரச நியமனங்களில் உள்வாங்கத் தீர்மானம்

(கொழும்பு)

அங்கீகரிக்கப்பட்ட இந்திய பல்கலைக்கழகங்களில் பயின்ற பட்டதாரிகளையும் பட்டதாரி நியமனங்களில் உள்வாங்க 11

## றோஸ் பாணுக்குள் 3 குண்டூசிகள்

அச்சுவேலியில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அச்சுவேலி பகுதியில் வாங்கிய பாணுக்குள் 11

தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க

# சர்வதேச சமூகம் முன்வர வேண்டும்

## ஐரோப்பிய தூதுக்குழுவினரிடம் சம்பந்தன்

(கொழும்பு)

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க சர்வதேச சமூகம் முன்வர வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவிடம் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)



போதைப்பொருட்களுடன்

## பல்கலை மாணவர்கள் மூவர் யாழில் கைது

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் மூவர் போதைப்பொருட்களுடன் நேற்று யாழில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மாணவர்கள் மூவரில் ஒருவர் பெரும்பான்மையினத்தை சேர்ந்தவர் 11

## வாள்வெட்டுடன் தொடர்புடையவர்

சுன்னாகம் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

17 வயதுடையவர் மீது வாள் வெட்டுத் தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் ஒருவர் சுன்னாகம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். 11

## நிதி அமைச்சுப் பதவியை இழக்கிறார் ஜனாதிபதி ரணில்?

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதி அமைச்சு பதவியை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 22 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தில் சபாநாயகர் கையொப்பமிட்டதன் பின்னர் ஜனாதிபதி ரணில், நிதியமைச்சர் பதவியை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. 11

2023ஆம் ஆண்டுக்கான

## பட்ஜெட் நவம்பர்

சமர்ப்பிக்கப்படும்




05ஆம் பக்கம் பார்க்க

## நாட்டை மீட்க ரணிலுக்கு பெரமுன ஒத்துழைக்கும்

நாமல் எம்.பி தெரிவிப்பு

(புத்தளம்)

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்க ஜனாதிபதிக்கு பொதுஜன பெரமுன ஒத்துழைக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் புத்தளம் ஆனமடுவ தொகுதிக்கூட்டத்தில் 11

## ஆணைக்குழுக்களின் தலைவர்களை நீக்க 21ஆவது திருத்தத்தை பயன்படுத்தக்கூடாது

சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்து

(கொழும்பு)

ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களை நீக்குவதற்கு அரசியலமைப்பின் 21ஆவது திருத்தத்தை பயன்படுத்தக்கூடாதென இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் தொடர்பில் உரிய கட்டுப்பாடுகளும் சமநிலையும் 21ஆவது திருத்தத்தில் உள்வாங்கப்படாமை வருத்த 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்றி காக்கும் உங்கள் நாளிதழ்

# இனப் பிரச்சினையை தீர்க்கும் நிலையில் ரணில் இல்லை

## தி ஸ்டேட்ஸ்மன் செய்தி வெளியீடு

(புதுடில்லி)

இலங்கையின் மோசமான பொருளாதார சூழ்நிலையில், தற்போதைய அரசாங்கம், திவாலான பொருளாதாரத்தை மீட்டெடுப்பதிலேயே கவனத்தை செலுத்துகிறது.

பொதுமக்கள் தொடர்ந்தும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

எனவே இனப்பிரச்சினைக்கு தீர்வு காணக்கூடிய நிலையில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் ஜனாதிபதியாக செயற்பட்டு வரும் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இல்லை என்று இந்தியாவின் தி ஸ்டேட்ஸ்மன் என்ற செய்தித்தளம் கருத்துரைத்துள்ளது.

இதன் காரணமாக இலங்கையில் தமிழர்களுக்கான தீர்வை, இலங்கை அரசாங்கம் தவிர்த்து வருவதாக அந்த செய்தித்தளம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் 6, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக 20 நாடுகள் வாக்களித்து தீர்மானத்தை நிறைவேற்றின.

2009ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் முடிவடைந்த பின்னர், போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக்கூறல் தொடர்பில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட 10ஆவது தீர்மானம் இதுவாகும்.

எனினும், இலங்கை அரசாங்கம், தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட குற்றங்களுக்கு இதுவரை பொறுப்புக் கூறவில்லை.

போரிலும் அதன் பின்னரும் காணாமல்போன தங்களின் அன்புக்குரியவர்களுக்கு நீதி கோரி தமிழர்கள் 2,000 நாட்களாக போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

2018 ஆம் ஆண்டில் நல்லாட்சி அரசாங்கம் காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்தை அமைத்தது.

எனினும், 2019 இல் ஆட்சி வந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக்கூறலை சரி செய்வதற்கான முன்னைய அரசாங்கத்தின் சர்வதேச கடப்பாடுகளுக்கு மதிப்பளிக்கப் போவதில்லை என்று திட்டவட்டமாக கூறிவிட்டதாக தி ஸ்டேட்ஸ்மன் குறிப்பிட்டுள்ளது.

2020 இல், காணாமல் போனவர்கள் அனைவரும் இறந்துவிட்டார்கள், எனவே உறவினர்களுக்கு இறப்பு சான்றிதழ் வழங்கப்படும் என்று ஜனாதிபதி கோட்டாபய கூறினார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பது முக்கியம், எனினும் ஆதாரம் இல்லாமல் அவர்கள் இறந்ததாக கூறப்படுவதை, காணாமல்போனோரின் குடும்பத்தினர் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்றும் இந்திய செய்தித்தளமான தி ஸ்டேட்ஸ்மன் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை போர்க்குற்றங்கள் மற்றும் காணாமல் போனோர் தொடர்பான பொறுப்புக்கூறல் விடயத்தில் எந்த முன்னேற்றமும் ஏற்படாத நிலையில், அரசியல் பிரச்சினையையும் தீர்க்க இலங்கை அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று அந்த செய்தித்தளம் சுட்டிக்காட்டியுள்ளது. (ம-7)

# நிறுவனங்களை பதிவதற்கான கட்டணங்களில் திருத்தம்

நிறுவனங்களை பதிவு செய்வதற்கான கட்டணத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்குரிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 25 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் நிறுவனங்களை பதிவு செய்வதற்கான கட்டணங்களில் திருத்தங்களை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

25 நிறுவனங்கள் மற்றும் சங்கங்களுக்கு அமைவாக கட்டண திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனங்களை பதிவு செய்வதற்கு திருத்தப்பட்ட கட்டணமாக 4 ஆயிரத்து 600 ரூபாய் அறவிடப்படுகின்றது.

அத்துடன் வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களை பதிவு செய்வதற்கான திருத்தப்பட்ட கட்டணமாக 23 ஆயிரம் ரூபாய் அறவிடப்படுவதுடன், நிறுவனத்தின் பெயரை அங்கீகரிப்பதற்கு 2 ஆயிரத்து 300 ரூபாய் அறவிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் திருத்தப்பட்ட கட்டணங்களுக்கு பெறுமதி சேர் வரி சேர்க்கப்படும் எனவும் வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# மனைவியின் சகோதரியான மாணவியை துஷ்பிரயோகம் செய்த குடும்பஸ்த்தர் கைதாகி மறியல்

(மன்னார்)

தனது மனைவியின் சகோதரியான பாடசாலை மாணவி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த 26 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரை எதிர்வரும் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் நேற்று வியாழக்கிழமை(27) உத்தரவிட்டுள்ளார்.

குறித்த சம்பவம் மன்னார் தாராபுரம் கிராமத்தில் இடம் பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

மன்னார் தாராபுரம் கிராமத்தைச் சேர்ந்த 15 வயதுடைய பாடசாலைமாணவி ஒருவர் கடந்த வாரம் காணாமல் போனமை தொடர்பில் குறித்த மாணவியின் பெற்றோர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

இந்த நிலையில் குறித்த மாணவியை தேடி வந்தனர். இந்த நிலையில் குறித்த மாணவியின் மூத்த சகோதரியின் கணவர் குறித்த சிறுமியை தாராபுரம் கிராமத்தில் உள்ள பிரிதொரு வீட்டில் தடுத்து வைத்து பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தி வந்துள்ளதாக தெரியவந்தது.

சுமார் 3 தினங்கள் தடுத்து வைக்கப்பட்டு பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டதாக தெரியவந்துள்ளது. குறித்த மாணவி தடுத்து வைக்கப்பட்ட வீட்டிற்கு இருவர் கண்காணிப்பு நடவடிக்கையிலும் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில் 3 நாட்களின் பின்னர் குறித்த மாணவி வீடு சென்ற நிலையில், வீட்டுக்குச் சென்ற பொலிஸார் குறித்த சிறுமியை மீட்டுள்ளனர்.

சிறுமியிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின்போது தனது சகோதரியின் கணவரால் தான் தடுத்து வைக்கப்பட்டு துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்ட தாகவும்,மேலும் இருவர் உடந்தையாக இருந்தமையை குறித்த சிறுமி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

மேலும் குறித்த சிறுமி மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது பல தடவைகள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டமை தெரிய வந்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் தாராபுரம் கிராமத்தைச் சேர்ந்த குறித்த சிறுமியின் சகோதரியின் கணவர் மற்றும் ஏனைய இருவரையும் பொலிஸார் தேடி வந்தனர்.

இந்த நிலையில் குறித்த சிறுமியின் சகோதரியின் கணவர் சட்டத்தரணி ஊடாக மன்னார் நீதிமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை (28) முன்னிலையானார்.

இதன் போது விசாரணை களை மேற்கொண்ட மன்னார் நீதவான் குறித்த நபரை எதிர்வரும் 4ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டார்.

(ம-7,285)

2ம் ஆண்டு
நினைவலைகள்
அமரர்
கிருஸ்ணபிள்ளை
இலட்சுமிகாந்தன்
திதி: சதுர்த்தி
28.10.2022
பிறப்பு:-17.01.1951 | இறப்பு:-20.10.2020

இரவும் பகலும்
கடின உழைப்பு உழைத்து
எம்மை வளர்த்து
முன்னிலைப்படுத்திய
எம் தெய்வம் இலட்சுமி
எமது உயிர் உள்ளவரை
உங்கள் நினைவு
எங்களைவிட்டு நீங்காது
ஞானவரைவர் கோவிலடி
பத்தமேனி,
அச்சுவேலி.
(13269)
என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்
பேரப்பிள்ளை சாயித்

துயர் பகிர்கின்றோம்

புதிய உயர் கல்லூரியின்
இயக்குநரும் இந்துநாகரிக பாட
பிரபல விரிவுரையாளருமான
அமரர்
சண்முகநாதன்
அருள்நங்கை
அவர்களின் இறப்புச் செய்தி
கேட்டு நாமும்
துயரடைவதுடன்
அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
கல்விச் சமூகம்
பொருளியற் கல்லூரி - யாழ்ப்பாணம்
பொருளியற் கல்லூரி - சுன்னாகம்
BARATHY - சித்தன்கேணி
(C-5167)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'போதைக்கு எதிரான பாதை' விழிப்புணர்வு நடவடிக்கை



(அராலி)

அனைத்துலக தமிழர் மேம்பாட்டு நிதியத்தின் அனுசரணையுடன் YAN அமைப்பு இணைந்து முன்னெடுக்கும் "போதைக்கெதிரான பாதை" எனும் தொனிப்பொருளில் பாடசாலை மாணவர்கள் மத்தியிலான விழிப்புணர்வு நடவடிக்கை நேற்று முன்தினம் ஆரம்பமானது.

இதன் முதற்கட்டமாக மாணவர்களுக்கான சித்திரப்போட்டி, சுலோகம் எழுதுதல் போன்ற போட்டிகள் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் சமூக நல விழிப்புணர்வுடன் ஆர்வமாக கலந்து கொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தனர்.

இவற்றிற்கான போட்டி முடிவுகள் மதிப்பிடப்பட்டு எதிர்வரும் திங்கட்கிழமை பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்படும்.

இதனைத் தொடர்ந்து ஏனைய பாடசாலைகளிலும் இப்போட்டிகளுடன் போதைப் பொருளுக்கெதிரான விழிப்புணர்வுப் போட்டிகளை எதிர்பார்த்துள்ளோம் என நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (4-104)

# கலாபூஷண விருதுக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 2022 ஆம் ஆண்டிற்கான கலாபூஷண விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதில் கலைக்கு விசேட சேவையாற்றி 60 வயதைப் பூர்த்தி செய்த நல்லூர் பிரதேச செயலக பிரிவில் நிரந்தரமாக வசிக்கும் கலைஞர்கள் விருதுக்கான தங்களுடைய சுய விபரக்கோவையுடன் கலை சார்பாக தங்களிடம் உள்ள ஆவணங்களின் மூலப்பிரதிகளை 2022.11.08 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக கலாசார பிரிவில் சமர்ப்பிக்குமாறு நல்லூர் பிரதேச செயலாளர் எ.அன்ரன் யோகநாயகம் அறிவித்துள்ளார். (4)

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியன இணைந்து வழங்குகின்ற கலாபூஷண விருது 2022 ஆம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் யாழ். பிரதேச செயலகத்தினால் கோரப்பட்டுள்ளன.

எனவே யாழ்ப்பாண பிரதேச செயலகப் பிரிவில் நிரந்தரமாக வசிக்கும் 60 வயதினைப் பூர்த்தி செய்து கலைக்காக அளப்பரிய சேவையாற்றிய கலைஞர்கள் பிரதேச செயலக கலாசார பிரிவில் அதற்கான விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று எதிர்வரும் 04.11.2022 ஆம் திகதி க்கு முன்னர் ஒப்படைக்குமாறு யாழ். பிரதேச செயலாளர் எஸ்.சுதர்சன் அறிவித்துள்ளார். (4)

# புத்தூர் பொதுநூலகத்தின் வாசிப்பு மாத பேரணி

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு பிரதேச சபை புத்தூர் பொது நூலகத்தினால் எதிர்வரும் 31 ஆம் திகதி காலை 7.30 மணியளவில் வாசிப்பு மாதத்தையொட்டியும் வாசிப்புப் பழக்கத்தை மாணவர்கள், பொதுமக்களிடத்தே ஊக்குவிக்கும் முகமாகவும் யா/புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி மாணவர்களுடன் இணைந்து புத்தூர் சந்தியில் இருந்து சோமஸ்கந்தா கல்லூரி வரையான நடைபவனி பேரணி ஒன்றினை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

அதனைத் தொடர்ந்து கல்லூரி மண்டபத்தில் செந்தமிழ் சொல்லருவி ச.லலீசனின் சிறப்புரையும் இடம்பெற உள்ளது. (4)

# 'சித்திர முத்திரைகள்' கண்காட்சி நாளை

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் " சித்திர முத்திரைகள்" என்னும் ஓவிய,கைவினைப் பொருட்களின் கண்காட்சி நாளை 29 ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் 31 ஆம் திகதி திங்கட்கிழமை வரை தினமும் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை இல. 128, டேவிற் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது அழகியல் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கலைத்தூது அழகியல் கல்லூரியில் சித்திரப் பாடத்தையும் ஏனைய நுண்கலை பாடங்களையும் பயில்கின்ற மாணவர்களது ஆற்றல்களை வெளிக்கொணரும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டு கடந்த பல வருடங்களாக நடத்தப்பட்டு வருகின்ற இக்கண்காட்சியில் இம்முறை அயல் பாடசாலைகளில் சித்திர பாடத்தைப் பயில்கின்ற மாணவர்களும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சித்திர முத்திரைகள் கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வு நாளை காலை 9.30 மணிக்கு இடம்பெறும்.

இதன்போது யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலகத்தின் அழகியல் பாட (பதில்) உதவிக் கல்விப் பணிப்பாளர் து.துசியந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைக்கவுள்ளார். (4)

# பட்ஜெட் மக்கள் பார்வைக்கு

(யாழ்ப்பாணம்)

2023 ஆம் நிதியாண்டிற்கான வலி.மேற்கு பிரதேச சபையின் வரவு செலவுத்திட்டம் பொதுமக்கள் பார்வைக்காக காரைநகர் வீதி, சுழிபுரத்தில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்திலும் சங்கானை, சுழிபுரம், வட்டுக்கோட்டை, அராலி ஆகிய உபஅலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் இன்று முதல் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை மக்களது பார்வைக்காகவும் அபிப்பிராயங்கள் மற்றும் ஆலோசனைகளுக்காகவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது என பிரதேச சபை தவிசாளர் த.நடநேந்திரன் அறிவித்துள்ளார். (4)

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சித் திட்ட வரவு செலவுத் திட்ட முன்மொழிவானது பிரதேச சபையின் தலைமை அலுவலகம் மற்றும் அதன் உபஅலுவலகங்களில் பொதுமக்கள் கருத்தாய்விற்காக இன்று தொடக்கம் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை அலுவலக நேரங்களில் காட்சிப்படுத்தப்படவுள்ளது.

இது தொடர்பிலான மாற்று முன்மொழிவுகள் ஏதும் இருப்பின் எதிர்வரும் 11 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு முன்னர் தலைமை அலுவலகம் மற்றும் அவ்வவ் உபஅலுவலகங்களில் நேரடியாக சமர்ப்பிக்கலாம் என பிரதேச சபை தவிசாளர் அறிவித்துள்ளார். (4)

# எல்லை தாண்டிய மீன்பிடி 7 தமிழக மீனவர்கள் கைது



(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்புக்குள் சட்டவிரோதமான முறையில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஏழு தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு கடற்பரப்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை சட்டவிரோதமாக படகொன்றில் நுழைந்து 7 தமிழக மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த போதே அப்பகுதியில் சுற்றுக்காவல் பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களை மயிலிட்டி கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைக்க கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (4-33-104)

## கவிஞர் உடுவிலூர் கலாவின் நூல்கள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கவிஞர் உடுவிலூர் கலா எழுதிய 'மரபின் விழுதுகள்' மற்றும் 'என் சுவாசக்காற்று' ஆகிய இரு நூல்களின் வெளியீடு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுன்னாகம் பொதுநூலகத்தில் வலி/தெற்கு எழுத்தாளர் சங்கத்தின் தலைவர் இ.மயூரநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி/தெற்கு தவிசாளர் க.சுதர்சன் கலந்து கொள்வார். (4)

## இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபையின் 53 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு இலங்கை மின்சார சபை வடமாகாண ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கத்தினால் இரத்ததான முகாம் எதிர்வரும் 1 ஆம் திகதி யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதி இலங்கை மின்சார சபை பிரதிப் பொதுமுகாமையாளர் அலுவலகத்தில் காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை நடைபெறவுள்ளது. (4)

# 'செங்குந்தா சதுக்கம்' கடைத்தொகுதி நேற்று திறந்து வைப்பு



(அராலி)

உலக வங்கி பிரதேச அபிவிருத்தி உதவித்திட்ட நிதிப்பங்களிப்பின் கீழ் யாழ். மாநகர சபையால் நிர்மாணிக்கப்பட்ட "செங்குந்தா சதுக்கம்" கடைத்தொகுதி நேற்று வியாழக்கிழமை காலை யாழ். மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணனால் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் மாநகர சுகாதார குழுத்தலைவர் வ.பார்த்தீபன், மாநகரசபை ஆணையாளர் இ.த. ஜெயசீலன் , வட்டார உறுப்பினர்கள் வி. மதிவதனி, அ.ப. சுபாஜினி,நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் தெ.கிரிதரன், கல்வியங்காடு வர்த்தக சங்கத்தினர், கல்வியங்காடு மரக்கறி- மீன் வியாபாரிகள், சமூக அமைப்பினர், மாநகர சபை உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தனர். (4-33-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நந்தாவில் பிரீமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி அண்மையில் நல்லூர் பிரதேச சபை மைதானத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கலந்து கொண்டு வெற்றியாளர்களுக்கான பரிசில்களை வழங்கி கௌரவித்தார்.

(படம்:சுபேசன்)



2022 ஆம்ஆண்டுக்கான தேசிய மட்ட பளுதூக்கல் போட்டி அண்மையில் பொலநறுவையில் இடம்பெற்றது.

இதில் யாழ். பாஷையூர் சென். அன்ரனீஸ் றோ.க மகளிர் வித்தியாலயத்தின் 20 வயது பிரிவில் யே.சுகன்யா தங்கப்பதக்கத்தையும் டி.டிலக்சியா, யூ.ஸ்ரெலா வெண் கலப்பதக்கத்தையும் பெற்றுக் கொண்டுள்ளனர். அத்துடன் 4 ஆம் இடத்தை அ.விஜிதா மற்றும் 5 ஆம் இடத்தை அ.சரோமி ஆகியோர் பெற்றுக்கொண்டுள்ளனர்.

மேலும் 17 வயதுப் பிரிவில் ஆர்.றெக்சியா-வெள்ளிப் பதக்கத்தையும் நி.ஆன்மேரி வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டுள்ளனர்.

இப்பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியரான ம.மதிவதனனின் வழிகாட்டுதலின் கீழ் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் இப்பாசாலை தேசிய மட்ட பளுதூக்கலில் 2 முறை சம்பியனாகவும் 2 முறை இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவிடம் மண்டியிட்டது நெதர்லாந்து அணி



இருபது-20 உலகக் கிண்ணத் தொடரின் சுப்பர் 12 சுற்று குழு இரண்டில் நடைபெற்ற தொடரின், 23 ஆவது போட்டியில், இந்தியக் கிரிக்கெட் அணி, 56 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

சிட்னி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில், இந்தியக் கிரிக்கெட் அணியும் நெதர்லாந்து கிரிக்கெட் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியக் கிரிக்கெட் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 179 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, விராட் கோலி 62 ஓட்டங்களையும் ரோஹித் சர்மா 53 ஓட்டங்களையும் சூர்ய குமார் யாதவ் 51 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இதனைத்தொடர்ந்து 180 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய நெதர்லாந்து அணியால், 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 123 ஓட்டங்களையே பெற முடிந்தது.

இதனால், அந்த அணி 56 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, பிரிங்ல் 20 ஓட்டங்களையும் கொலின் அக்கர்மேன் 17 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். (4)




டிஜா

பணக்காரர்களைப் பார்த்து கூட வராத பொறாமை



படுத்த உடனே தூங்குறவங்கல பார்த்தா வருது

டிஷான்

நீங்க தான் இங்கிலிஷ் பேசுவீங்களே எனக்கும் சொல்லிக் குடுங்க அண்ணே



நானே PUSH க்கும் PULL க்கும் மீனிங் தெரியாம டோர்ல முட்டிப்பன் என்கிட்ட போய் கேட்குறியேப்பா.

யுஸ்ரி

தொலைந்த அத்தனையிலும் துரோகத்தின் சாயல் கிடைத்த அத்தனையிலும் நிம்மதியின் சாயல்



ஹறின்

பிரச்சினைகளை சொல்லி வாழ்வது வாழ்க்கை இல்லை. இதெல்லாம் ஒரு பிரச்சினையான்னு சொல்லிவிட்டு நகர்வது தான் வாழ்க்கை.

ரஞ்சனா

நீ விழும் போது உனக்கு முதலில் உதவி செய்பவன் ஏற்கனவே அவன் விழுந்து அதனால் ஏற்படும் வலியை உணர்ந்தவனாய் இருப்பான்.



அஷ்வின்



வாய்ப்புக்காக காத்திருக்காதே உனக்கான வாய்ப்பை நீயே ஏற்படுத்திக் கொள்.

- அப்துல் கலாம்-

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருந்தூர் மலை பௌத்த விகாரை என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டுமாம்

## மெதகொட தம்மானந்த தேரர்



(கொழும்பு)

குருந்தூர் மலை இந்துக் கோவில் என குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.குருந்தூர் மலை பௌத்த விகாரை என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

புத்த சாசனத்தின் அடையாள ங்களை அழிக்க ஒருபோதும் இட மளிக்க முடியாது என தேசிய பாரம் பரியத்தை பாதுகாப்பதற்கான அமை ப்புக்களின் கூட்டமைப்பின் தலைவர் மெதகொட தம்மானந்த தேரர் தெரி வித்தார்.

நேற்று வியாழக்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கை யில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது. ஒரு சில அரசியல்வாதிகள் குருந்தூர் மலை விவகாரத்தில் உண்மையை அறிந்து கொண்டு குறுகிய அரசியல் நோக்கத்துக்காக அமைதியாக செயற்படுகிறார்கள். புத்த சாசனத்துக்கு எதிராக செயற்படு பவர்கள் அனைவரும் சபிக்கப்படு வார்கள்.

100 -103 வரையான காலப்ப குதியில் குருந்தூர் மலையில் பௌத்த விகாரை நிர்மாணிக்கப்பட்ட தாகவும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பௌத்த தொல் பொருள் அம்சங்கள் அடங்கிய விகாரைகள் நிர்மாணிக்கப்பட்ட தாகவும் மகாவம்சத்தில் குறிப் பிடப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் பெரும ளவான நிலப்பரப்பை குருந்தூர் மலை விகாரை கொண்டுள்ளது. இந்த விகாரைக்குச் சொந்தமான காணியில் பௌத்த மத அடை யாளத்தை பிரதிபலிக்கும் சின்ன ங்கள் காணப்படுவதாக தொல் பொருள் ஆய்வு சான்றுகளில் குறிப் பிடப்பட்டுள்ளன.

குருந்தூர் மலை விகாரை இந்து கோயில் என்று குறிப்பிடுவதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடி யாது. விகாரையின் நிர்மாணப் பணிகளுக்கு தமிழ் அடிப்படை வாதிகள் எதிர்ப்பு தெரிவிப்பது வன்மையாக கண்டிக்கத்தக்கது. புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் கட்டளைக்கு அமையவே தமிழ் அரசியல்வாதிகள் செயற்படுகிறார் கள்.

புத்த சாசன அமைச்சர் மற்றும் தொல்பொருள் திணைக்கள பணிப் பாளர் நாயகத்தின் செயற்பாடுகள் கண்டிக்கத்தக்கது.

குறுகிய நோக்கத்துக்காக புத்த சாசனத்தின் அடையாளங்களை இவர்கள் விட்டுக் கொடுக்கிறார்கள். குருந்தூர் மலையில் புத்தசாசனத் துக்கு பாதிப்பை ஏற்படுத்த ஒரு போதும் இடமளிக்க முடியாது. கடு மையான எதிர்ப்பை வெளிப்படுத்து வோம் என தேரர் தெரிவித்தார். (நி)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில் 02 02 1951

விண்ணுலகில் 07 11 2021



அமரர். வேலுப்பிள்ளை சிவயோகன்

(முன்னாள் வடக்கு மாகாண சபை கௌரவ உறுப்பினர் ஓய்வுநிலை நிறைவேற்று பொறியியலாளர் -RDD)

அந்த புன்சிரிப்பையும் கம்பீர குரலையும் கேட்டு ஓராண்டாயிற்று
கல்வியிலே வல்லவனாய் பல்கலையும் கண்டீர்
வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் வித்தகனாய்
நிறைவேற்று பொறியியலாளனானீர்
மக்கள் பிரதிநிதியாய் வடக்கு மாகாண சபையில்
கௌரவ உறுப்பினராய் வலம் வந்தீர்
அபிவிருத்திப் பணியில் வீதிகள், பாலங்கள், குடிநீர்
விநியோகம், கட்டடம்... என அனைத்திலும்
அனுபவம் நிறைந்த ஆலோசகனானீர்
பாடசாலை, வைத்தியசாலை, சனசமூக நிலையம்,
விளையாட்டுக் கழகம், ஆலயம்... எனப் பொது
அமைப்புக்களின் தேவை அறிந்து ஓடிச்சென்று சேவை புரிந்தீர்
அர்ப்பணிப்புடன் ஆன்மீக சேவை புரிந்து அரசடி
விநாயகனின் பாதங்கள் தழுவி இளைப்பாற சென்று விட்டீர்
என்றும் ஈர விழிகளுடன் உங்கள் நினைவுகளை சுமந்தபடி நாம்
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

(C-5156)

ஆயர்பாடி,
துன்னாலை மத்தி,
கரவெட்டி.

077 229 9939

இங்ஙனம்,
குடும்பத்தினர்.


# வரவு செலவுத் திட்டம் நவம்பரில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபே வர்தன தலைமையில் பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழு கூட் டம் நேற்று வியாழக்கிழமை இடம் பெற்றது.

இதன்போதே பாராளுமன்ற விவ காரங்களுக்கான குழு இந்தத் தீர்மா னத்தை எடுத்துள்ளதாக தெரிவிக்க பட்டுள்ளது. (நி)

# இராசிபலன்

28.10.2022
ஐப்பசி 11, வெள்ளிக்கிழமை
திதியை பிற்பகல் 12.49 மணிவரை

அனுசம் பிற்பகல் 1.21 மணிவரை
சுபநேரம் 6.03-7.33 மணிவரை
இராகுகாலம் 10.33-12.03 மணிவரை

சதுர்த்தி விரதம்
சந்திராஷ்டமம் - பரணி, கார்த்திகை

வளவன்

**மேஷம்:** பொதுவாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, ஆரோக்கியத் தில் கவனம் தேவை, வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, விரயங்கள் கூடும் நாள்.

**கடகம்:** நீண்ட நாளைய விருப்ப ங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, மற்ற வர்கள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கொடுக்கல் - வாங்கல்கள் ஒழுங்காகும்.

**துலாம்:** புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேர லாம், பக்குவமாக நடந்து பாராட்டு பெறும் நாள், தொழில் வளர் ச்சி அதிகரிக்கும் நாள், பெரிய மனிதர்கள் வீடு தேடி வருவார்.

**மகரம்:** வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், இறைவழிபாட்டுச் சிந் தனை மேலோங்கும் நாள், பலரது அன்பிற்கு பாத்திரமாவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**ரிஷபம்:** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு, பொரு ளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**சிம்மம்:** உறவினர் வழியில் எதிர் பார்த்த உதவிகள் கிடை க்கலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், மகிழ் ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், திருமண முயற்சி கள் வெற்றி தரும்.

**விருச்சிகம்:** ஆன்மிகச் சிந்தனை மேலோங்கும் நாள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீ ர்கள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்:** வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், அருமை யான நாள், புதிய முய ற்சிகளில் ஆர்வம் காட் டுவீர்கள், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மிதுனம்:** நன்மைகள் நடைபெ றும் நாள், கனவு பலித முண்டு, வியாபார விரு த்தியுண்டு, பழைய கடன்களை நிவர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், ஆரோக்கியமான நாள்.

**கன்னி:** உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், வழிபாடு முன்னேற்றம் தரும், செல்வ நிலை உயரும் நாள், புண்ணிய காரியங் களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு:** வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், உடல் நலனில் அக்கறை காட்டும் சூழ் நிலை உருவாகும், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், அதிகாரிகளை அனுசரித்துச் செல் வது நல்லது.

**மீனம்:** கடுமையான எதிர்ப்புகள் கூட திடீரென சாதக மாகி விடும், எதிர்கா லம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், நண்பர்களால் நன்மையுண்டு, பயண ங்கள் கைகூடும்.

உனது பணிக்கு தேவையற்றதை உதறித் தள்ளிவிடு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 13





"நானும் கேள்விப்பட்டிருக்கிறேன் ஒரே கூட்டமாயிருக்கிறதே! கோயிலில் ஏதாவது விசேஷ உற்சவம் உண்டோ?" "ஆம்; இன்று ஆண்டாள் திருநட்சத்திரம் ஆடிப் பதினெட்டாம் பெருக்கோடு ஆண்டாளின் திருநட்சத்திரமும் சேர்ந்து கொண்டது; அதனால்தான் இவ்வளவு கோலாகலம். தம்பி! ஆண்டாள் பாசுரம் ஏதாவது நீ கேட்டிருக்கிறாயா?"

"கேட்டதில்லை" "கேட்காதே! அதைக் காதினாலேயே கேட்காதே!" "ஏன் அவ்வளவு வைஷ்ம்யம்?" "வைஷ்ம்யமும் இல்லை; விரோதமும் இல்லை; உன்னுடைய நன்மைக்குச் சொன்னேன். ஆண்டாளின் இனிய பாசுரத்தைக் கேட்டு விட்டாயானால், அப்புறம் வாளையும் வேலையும் விட்டெறிந்து விட்டு என்னைப் போல் நீயும் கண்ணன் மேல் காதல் கொண்டு விண்ணகர யாத்திரை கிளம்பி விடுவாய்!"

"உனக்கு ஆண்டாள் பாசுரங்கள் தெரியுமா? பாடுவாயா?" சில தெரியும்; வேதம் தமிழ் செய்த நம்மாழ்வார் பாசுரங்களில் சில தெரியும். பெருமாள் சந்நிதியில் பாடப் போகிறேன். வேணுமானால் கேட்டுக் கொள்!

இதோ கோவிலும் வந்து விட்டது! இதற்குள் உண்மையிலேயே வீர நாராயணப் பெருமாள் கோயிலை அவர்கள் நெருங்கி வந்து விட்டார்கள்.

விஜயாலய சோழனின் பேரனான முதற் பராந்தக சோழன் 'மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி என்ற பட்டம் பெற்றவன். சோழப் பேரரசுக்கு அஸ்திவாரம் அமைத்தவன் அவனே. தில்லைச் சிற்றம்பலத்துக்கு அவன் பொன் கூரை வேய்ந்து சரித்திரப் புகழ்பெற்றவன். சோழ சிகாமணி, சூரசிகாமணி முதலிய பல விருதுப் பெயர்களோடு வீரநாராயணன் என்னும் சிறப்புப் பெயரையும் அவன் கொண்டிருந்தான்.

பராந்தகனுடைய காலத்தில் வடக்கே இரட்டை மண்டலத்து ராஷ்டிரகூட மன்னர்கள் வலிமை பெற்று விளங்கினார்கள். மானிய கேடத்திலிருந்து அவர்கள் படையெடுத்து வரக் கூடுமென்று பராந்தகன் எதிர்பார்த்தான்.

எனவே தனது முதற் புதல்வனாகிய இளவரசன் இராஜாதித்தனை ஒரு பெரிய சைன்யத்துடன் திருமுனைப்பாடி நாட்டில் இருக்கச் செய்தான். அந்தச் சைன்யத்தைச் சேர்ந்த இலட்சக்கணக்கான வீரர்கள் வேலையின்றிச் சும்மா இருக்க நேர்ந்த காலத்தில் இராஜாதித்தன் ஒரு யோசனை செய்தான்.

குடிமக்களுக்கு உபயோகமான ஒரு பெரும் பணியை அவர்களைக் கொண்டு செய்விக்க எண்ணினான். வட காவேரி என்று பக்தர்களாலும் கொள்ளிடம் என்று மற்றவர்களாலும் அழைக்கப்பட்ட பெரு நதியின் வழியாக அளவில்லாத வெள்ள நீர் ஓடி வீணே கடலில் கலந்து கொண்டிருந்தது.

அதில் ஒரு பகுதியைப் பயன்படுத்த எண்ணித் தன் வசமிருந்த வீரர்களைக் கொண்டு கடல் போன்ற விசாலமான ஏரி ஒன்றை அமைத்தான்.

அதைத்தன் அருமைத் தந்தையின் பெயரால் வீரநாராயண ஏரி என்று அழைத்தான். அதன் கரையில் வீரநாராயண புரத்தை ஏற்படுத்தி அதில் ஒரு விண்ணகரையும் எடுத்தான். விஷ்ணுக்கிருஹம் என்பது அந்நாளில் விண்ணகரம் என்று தமிழாக்கப்பட்டு வழங்கிற்று.

ஸ்ரீமந் நாராயணமூர்த்தி நீரில் பள்ளி கொண்டு நீர்மயமாக இருப்பவர் அல்லவா? எனவே ஏரிகளைக் காத்தருளுவதற்காக ஏரிக் கரையையொட்டி ஸ்ரீ நாராயண மூர்த்திக்குக் கோயில் எடுப்பது அக்காலத்து வழக்கம். அதன் படி வீரநாராயணபுர விண்ணகரத்தில் வீரநாராயணப் பெருமாளைக் கோயில் கொண்டு எழுந்தருளச் செய்தான்.

அத்தகைய பெருமாளின் கோயிலுக்குத்தான் இப்போது வந்தியத்தேவனும் ஆழ்வார்க்கடியானும் சென்றார்கள். சந்நிதிக்கு வந்து நின்றதும் ஆழ்வார்க்கடியான் பாட ஆரம்பித்தான். ஆண்டாளின் பாசுரங்கள் சிலவற்றைப் பாடிய பிறகு நம்மாழ்வாரின் தமிழ் வேதத்திலிருந்து சில பாசுரங்களைப் பாடினான்.

(தொடரும்...)

# ஒக்டோபர் வாசிப்பு மாதம்

## சுகாதாரமும் நாமும்

சுகாதாரம் என்பது சுகமான வாழ்வின் அடையாளமாகும். மனிதனானவன் உடல் மற்றும் உள ரீதியாக நலமாக வாழ வேண்டும். நலமான வாழ்வின் மூலமே ஒருவனின் வாழ்வு சிறக்க முடியும். அவ்வாறான வாழ்விற்கு வழிமைப்பதே சுகாதாரம் ஆகும்.

முதன் முதலாக ஐரோப்பா போன்ற நாடுகளில் சுகாதாரமற்ற நிலைமையினால் சுகாதாரம் பற்றிய கோட்பாடு முன்வைக்கப்பட்டது. சுத்தம் அல்லது சுகாதாரம் என்பது நலம் மற்றும் நலமான வாழ்வு கருதி ஒரு சமூகத்தினால் பேணப்படும் நற்பழக்க வழக்கங்களாகும்.

ஆரோக்கியம் என்பது கருவறை தொடக்கம் கல்லறை வரை பங்களிப்புச் செய்கின்றது. நாம் சுத்தமான வளியைச் சுவாசிக்க வேண்டும். நாம் சுத்தமான வளியைச் சுவாசிக்க வேண்டுமென்றால் நாம் எமது சுற்றுச் சூழலை ஒழுங்காக வைத்திருத்தல் வேண்டும்.

நாம் ஆரோக்கியமாக வாழ்வதற்கு ஆய்வாளர்கள் ஐந்து வழிகளைச் சுட்டிக்காட்டுகின்றனர். முதலாவது வழிமுறை **"கைகளைக் கழுவுதல்"** நாம் கைகளைக் கழுவுவதனால் கொரோனா, நிமோனியா, வயிற்றுப்போக்கு போன்ற உயிர்கொல்லி நோய்கள் பரவுவதைத் தடுக்கலாம். மற்றும் சமைக்கும் முன், சாப்பிடும்முன், சாப்பிட்ட பின், கழிப்பறைக்குச் சென்றபின், மருந்து கட்டுவதற்கு முன், மருந்து கட்டியதற்குப் பின், விலங்குகளைத் தொட்ட பின் என அடுக்கிக் கொண்டே செல்லும் அளவிற்கு கைகளைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் அதிகமாக உள்ளன. இரண்டாவது வழிமுறை **"சுத்தமான நீர்"** நாம் அசுத்தமான நீரைக் குடிப்பதனால் எமக்குப் பல நோய்கள் பரவுகின்றன. அதனால் நாம் சுத்தமான நீரைக் குடித்து நோய்களிலிருந்து விலகுவோம்.

மூன்றாவது வழிமுறை **"உணவு உட்கொள்ளல்"** இந்தச் சூழ்நிலையில் நாம் சுத்தமான உணவு உண்கின்றோமா? என்பது கேள்விக் குறியாக உள்ளது. இப்பொழுது காய்கறிகளிற்கு இரசாயனப் பதார்த்தங்கள் கூடுதலாக சேர்க்கப்படுகின்றன. இதனால் எமக்குப் பல வியாதிகள் ஏற்படலாம். இதனால் நாம் இயற்கைப் பசளைகளை இட்டு சுத்தமான காய்கறிகளைப் பெற வேண்டும். மற்றும் உணவைச் சுடச் சுடச் சாப்பிடவேண்டும். உணவை மூடி வைக்க வேண்டும்.

நான்காவது வழிமுறை **"உடற்பயிற்சி"** நாம் தினமும் சற்றுநேரம் உடற்பயிற்சி செய்ய வேண்டும். அப்பொழுதுதான் உடல் திடகாத்திரமாகவும் நோய்களின்றியும் இருக்கும்.

ஐந்தாவது வழிமுறை **"சூரிய ஒளி"**. காலைச் சூரிய ஒளி எமது உடலில் படவேண்டும். இதனால் எமக்கு விற்றமின் D சத்து கிடைக்கும்.

நாம் இச்சூழ்நிலையில் அடிக்கடி கைகளைக் கழுவியும் முகக்கவசம் அணிந்தும் 3 அடி இடைவெளி விட்டும் மற்றவர்களுடன் இருக்கும் பொழுது எம்மைக் கொரோனா நெருங்காது ஆகவே நாம் சுகாதாரத்தைப் பேணி சுகமாக வாழ்வோம். (முற்றும்)

## விடுகதை

பிறருக்கு ஒளி கொடுக்கத் தலை கொடுக்கும் தலைவன். — தீக்குச்சி

இசைக்கு மயங்கும் இதைக் கண்டால் எல்லோர் நெஞ்சமும் நடுங்கும். — நாகபாம்பு

ஆயிரம் கதை சொல்லுவான்! ஆனால் வாய்திறந்து பேசமாட்டான். — புத்தகம்

மணத்திலும் உதவும் மரணத்திலும் உதவும். — பூமாலை

தொட்டால் பிடித்துக் கொள்ளும், விட்டால் விளக்கை எரிக்கும். — மின்சாரம்

நம்மோடு பிறந்து நாளெல்லாம் வளர்ந்து நம்மோடு மடியும். — வயது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 109

இது அங்குள்ள விவசாயிகளைப் பெருமளவில் பாதித்துள்ளதுடன் அவர்களை நம்பியிருக்கும் பிற நாட்டினரையும் பாதித்துள்ளது.

போர் காரணமாக உக்ரைன் பொருளாதாரம் வீழ்ச்சியடையும்

**போரின் விளைவாக இந்த ஆண்டு உக்ரைனின் பொருளாதாரம் 45% வீழ்ச்சியடையும் என்று உலக வங்கி எதிர்பார்க்கிறது.**

கிழக்கு ஐரோப்பா மற்றும் மத்திய ஆசியா முழுவதும் கொவிட்-19 தொற்றுநோயால் ஏற்பட்டதை விடப் பெரிய பொருளாதார சேதம் ஏற்படும் என்றும் கணித்துள்ளது. பொருளாதாரத் தடைகள் ரஷ்யாவிலும் மந்த நிலைக்கு வழிவகுத்துள்ளது.

உக்ரைனின் பெரும்பாலான பணியாளர்கள் தப்பியோட அல்லது சண்டையிட வேண்டிய கட்டாயத்தில் உள்ளார்கள்.

வணிகங்கள் மூடப்பட்டு விட்டன, சாலைகள், தொழிற்சாலைகள் மற்றும் பிற உட்கட்டமைப்புகள் அழிக்கப்பட்டுவிட்டன. மேலும், பல வருட முன்னேற்றம் தவிர்க்கப்பட்டுள்ளதாக உலக வங்கி கூறுகிறது.

சூரியகாந்தி,கோதுமை போன்ற பயிர்களுக்கு உக்ரைன் முக்கிய ஆதாரமாக இருந்தது. ஆனால், ஏற்றுமதி நிறுத்தப்பட்டதால் உலகளாவிய உணவு விலைகள் உயர்ந்துள்ளன. இதனால், உக்ரைன் ஒரு முக்கியமான வருமானத்தை இழந்துள்ளது. பொருளாதாரத் தடைகளால், இந்த ஆண்டு ரஷ்யா 11 சதவீதத்திற்கும் அதிகமாக வீழ்ச்சியைச் சந்திக்கும் என்று உலக வங்கி கணித்துள்ளது.

**ரஷ்யாவில் 600க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் தங்கள் வணிகத்தை நிறுத்தியுள்ளன.**

அமெரிக்க ஆராய்ச்சியாளர்களின் கூற்றுப்படி, உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்புக்குப் பிறகு, 600க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் ரஷ்யாவில் தங்கள் வணிகத்தை மொத்தமாக மூடியுள்ளன அல்லது குறைத்துள்ளன. ரஷ்யப் படையெடுப்பு தொடக்கத்திலிருந்து, யேல் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் 1000 க்கும் மேற்பட்ட பெரிய நிறுவனங்களை ஆய்வு செய்தனர். இந்த ஆய்வில், பல நிறுவனங்கள் ரஷ்யாவை விட்டு வெளியேறியுள்ளன. ஆனால் சில மேற்கத்தேய நிறுவனங்கள் இன்னும் ரஷ்யாவில் தங்கள் வணிகத்தை வழக்கமான முறையில் செய்து வருகின்றன என தெரியவந்துள்ளது.


**“அம்மா, சொர்க்கத்தில் சந்திப்போம்!” - உக்ரைன் போரில் தாயை இழந்த சிறுமியின் நெஞ்சை உருக்கும் கடிதம்**

உலக நாடுகளே உற்று நோக்கிக் கொண்டிருக்கும் ரஷ்யா-உக்ரைன் போர் இந்த நூற்றாண்டின் மூன்றாம் உலகப் போராகவே பார்க்கப் பட்டுவருகிறது. இந்தப் போரை நிறுத்தக் கோரி பல்வேறு நாடுகள் ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகளை விதித்துவருகின்றன.

ஆனால் ரஷ்யா தனது தாக்குதலை தொடரவே செய்கிறது. உக்ரைன் மக்கள் அண்டை நாடுகளுக்கு அகதிகளாக சாரை சாரையாகப் புலம்பெயர்ந்து வருகின்றனர். இந்த நிலையில், உக்ரைன் போரில் தன் தாயை இழந்த 9 வயது சிறுமி, தன்னுடைய தாயை மறக்க முடியாமல் டைரியில் எழுதிய கடிதம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்தக் கடிதத்தை உக்ரைனின் உள்துறை அமைச்சர் ஆன்டேன் கெராஷ்சென்கோ தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். அந்தக் கடிதத்தில் அந்தச் சிறுமி, “அம்மா... நீங்கள் இந்த உலகத்தில் சிறந்த அம்மா. நான் உங்களை எப்பொழுதும் மறக்க மாட்டேன். நீங்கள் சொர்க்கத்தில் மகிழ்ச்சியாக இருப்பீர்கள் என்று நம்புகிறேன். நான் நல்லவிதமாக இருப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு சொர்க்கத்துக்கு வருவேன். நான் சொர்க்கத்தில் உங்களைச் சந்திக்கிறேன்” என குறிப்பிட்டுள்ளார். இந்தக் கடிதம் படிப்போரை உருக வைக்கும் விதமாக இருக்கிறது.

அம்மா, சொர்க்கத்தில் சந்திப்போம்!" - உக்ரைன் போரில் தாயை இழந்த சிறுமியின் நெஞ்சை உருக்கும் கடிதம்




**போப் பிரான்சிஸ் மேற்கொண்ட ராஜீய முயற்சி தோல்வி**

உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதலை நிறுத்த, போப் பிரான்சிஸ் மேற்கொண்ட ராஜீய முயற்சி தோல்வி அடைந்தது.

(தொடரும்)

# அணு ஆயுத தடுப்புப் படையின் தயார் நிலை குறித்து புடின் ஆய்வு

## அச்சத்தில் உலக நாடுகள்



(மொஸ்கோ) ரஷ்யாவின் அணு ஆயுதத் தாக்குதல் தடுப்புப் படையின் தயார் நிலை குறித்து அந் நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஆய்வு செய்துள்ளார்.

அணு ஆயுதத்தை சுமந்து சென்று கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து தாக்கும் ஏவுகணைகள் மற்றும் குறைந்த உயரத்தில் அதிக வேகத்தில் பறந்து விமானப்படை மற்றும் கடற்படை இலக்குகளை துல்லியமாகத் தாக்கும் ஏவுகணைகளின் தயார் நிலை குறித்த ஒத்திகை நேற்று முன்தினம் நடத்தப்பட்டது.

இதனை ஜனாதிபதி புடின் ஆய்வு செய்ததாக ரஷ்ய ஜனாதிபதி மாளிகை கிரெம்ளின் தெரிவித்துள்ளது.

முன்னதாக சக்தி குறைந்த அணு ஆயுதங்களை தங்கள் நாட்டிற்கு எதிராகப் பயன்படுத்த உக்ரைன் திட்டமிட்டிருப்பதாக ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சகத்தின் அணு ஆயுதப் பாதுகாப்புப் படையின் தலைவர் இகோர் கிரில்லோ குற்றஞ்சாட்டியிருந்தார்.

இந்தப் பின்னணியில் தற்போது உக்ரைனுக்கு எதிராக ரஷ்யா தொடங்கிய தாக்குதல் 9 மாதங்களைக் கடந்துள்ள நிலையில் ரஷ்யாவின் தற்போதைய அணு ஆயுதத்தாக்குதல் தடுப்புப் படையின் தயார் நிலை உக்ரைன் போரில் ரஷ்யா அணு ஆயுதங்களை பயன்படுத்தலாம் என்ற அச்சத்தை தூண்டியுள்ளது. (நி)

## பங்களாதேஷில்

# ‘சிட்ராங்’ சூறாவளியால் 30 பேர் உயிரிழப்பு



(டாக்கா)

பங்களாதேஷில் ஏற்பட்ட சூறாவளியில் சிக்கி இதுவரை 30 க்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை பங்களாதேஷை தாக்கிய சிட்ராங் சூறாவளியால் 30 க்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன் சுமார் 10,000 வீடுகள் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் அதிகமானோர் உயிரிழந்தமைக்கு சூறாவளியால் மரங்கள் வீழ்ந்தமையே காரணம் என அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் மின்கம்பிகள் மீது மரங்கள் வீழ்ந்ததால் சுமார் 80 இலட்சம் பேர் மின்சாரமின்றி தவித்துள்ளனர்.

அத்துடன் 6,000 ஹெக்டேயர் பரப்பளவிலான பயிர்ச்செய்கைகள் நாசமாகியுள்ளதோடு ஆயிரக்கணக்கான மீன் வளர்ப்புத் திட்டங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரசாயன உரக்கப்பல் கொழும்பை வந்தடைந்தது

(கொழும்பு)

பெரும்போகப் பயிர்ச்செய்கைக்குத் தேவையான இரசாயன உரம் அடங்கிய முதலாவது கப்பல் கொழும்பு துறைமுகத்திற்கு வருகை தந்துள்ளது.

இதற்கமைய 12 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் யூரியா உரத்தினை ஏற்றிய கப்பல் நேற்று நாட்டினை வந்தடைந்துள்ளது.

பெரும்போகத்திற்குத் தேவையான யூரியாவினை இறக்குமதி செய்வதற்கு கோரப்பட்ட கேள்வி பத்திரத்திற்கு அமைவாகவே முதலாவது யூரியா தொகை நாட்டை வந்தடைந்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஒரு இலட்சத்து 20 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா உரம் எதிர்வரும் நவம்பர் மாத இறுதியில் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படவுள்ளதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பெரும்போக பயிர்ச்செய்கைக்குத் தேவையான உரத்தினை இறக்குமதி செய்வதற்கு உலக வங்கியினால் 110 மில்லியன் டொலர் கடனாக வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)


## பதவி வெற்றிடம்

**சிங்களம் சரளமாகப் பேசத் தெரிந்த பெண் உத்தியோகத்தர் தேவை**

**யாழ்.நகருக்கு அண்மையில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை.**

தொடர்பு:- **076 097 3121** (இ)

## பதவி வெற்றிடம்

**ஒப்புநோக்குநர் (ஆண்கள்)**

**- இரவுக்கடமை**

- யாழ்.நகருக்கு அண்மையில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை.
- வயதெல்லை 35க்கு மேல்

தொடர்பு:- **076 097 3121** (இ)


# மூச்சு விடுவதற்கும் வரிகள் அறவிடப்படலாம்

## தம்மரதன தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

ராஜபக்ஷவினரே நாட்டை அழித்தனர். கொள்ளையடிக்கும் சுவை அறிந்தே அவர்கள் விழுந்து விழுந்து மீண்டும் அரசியலுக்கு வருவதாக மிகிந்தலை ராஜமஹா விகாரையின் விகாராதிபதி வலவாஹெங்குனுவெவே தம்மரதன தேரர் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மக்கள் பெரும் கஷ்டங்களுக்கு உள்ளாகியுள்ளதுடன் அவர்களுக்கு உண்பதற்கும் உணவுகள் இல்லை. மக்கள் மூச்சு விடுவதற்கும் வரிகள் அறவிடப்படலாம்.

ராஜபக்ஷவினருக்கு மீண்டும் வாக்களிப்பார்கள் என்றால், அவர்கள் மாடுகளை விட கேவலமான மனித விலங்குகளாக இருப்பார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (நி)

## வாசிப்போம் உரைப்போம்

2022 ஆம் ஆண்டிற்கான வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு பொதுசன நூலகம் நடாத்தும் போட்டி நிகழ்வு.

புத்தகம் ஒன்றினை வாசித்து, வாசித்த புத்தகம் தொடர்பாக மூன்று நிமிடங்களுக்கு மேற்படாதவாறு 077 480 5210 என்னும் தொலைபேசி இலக்கத்துக்கு வைபர் (Viber) அல்லது வட்ஸ்அப் (Whatsapp) ஊடாக ஒளி, ஒலி நாடாவாக (Video) எமக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

➢ சிறந்த பதிவுகளுக்கு பரிசளிக்கப்படும்

| | |
|---|---|
| முதல் பரிசு | :-5000.00 |
| இரண்டாம் பரிசு | :-3000.00 |
| மூன்றாம் பரிசு | :-2000.00 |

மேலும் 5 ஆறுதல் பரிசுகள்

➢ இப்பதிவு 10.11.2022 க்கு முதல் எமக்கு கிடைக்கப் பெறுதல் வேண்டும்.

➢ ஒருவர் ஒரு பதிவினை மாத்திரமே அனுப்ப முடியும்.

➢ அனைவரும் கலந்து கொள்ள முடியும்.

**பிரதம நூலகர்,**
**பொதுசன நூலகம்,**
**யாழ்ப்பாணம்.**

(இ)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1984 கிறிஸ்தவம் RC
நட்சத்திரம்: பூரட்டாதி 3
கி.பா: சூரி 3 செவ் 1 இல்
உயரம்: 5' 6"
தகைமை/தொழில்: O/L பிரான்ஸ்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்தபெண்
தொ.இ: B/13066

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: சதயம் 1
கி.பா: 39 சூரி 11 செவ் 2 இல்
உயரம்:5' 2"
தகைமை/தொழில்: படவரைஞர் (தனியார் தொழில்)
எதிர்பார்ப்பு : சாதாரண படித்த பெண்
தொ.இ: B/13068

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 2
கி.பா : சூரி. செவ் 12 இல்
உயரம்:5' 8"
தகைமை/தொழில்: MBBS,LLB லண்டன்
எதிர்பார்ப்பு: படித்த பெண், லண்டனில் பிறந்தவர் விரும்பத்தக்கது
தொ.இ: B/13069

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 4
கி.பா: சூரி. செவ் 8 இல்
தகைமை/தொழில்:A/L ஜேர்மனி PR இல்லை
எதிர்பார்ப்பு: PR உள்ள வெளிநாட்டுப் பெண். விவாகரத்து ஏற்றுக்கொள்ளப்படும்.
தொ.இ: B/13070

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 4
கி.பா: 14 சூரி 4 செவ் 6 இல்
உயரம்: 158 cm
தகைமை/தொழில்: BA பட்டதாரி
எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்
தொ.இ:G/13080

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: பூரம் 4
கி.பா: சூரி 7 செவ் 6 இல்
உயரம்: 5' 6"
தகைமை/தொழில்: BIT Software Engineer
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ:G/13091

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: சுவாதி 1
கி.பா: 39 1/2 சூரி 7 செவ் 3 இல்
உயரம்: 5' 6"
தகைமை/தொழில்:BA பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு:அரச தொழில்(உள்நாடு மட்டும்)
தொ.இ:G/13092

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி 1
கி.பா: 40 சூரி 11 செவ் 1 இல்
உயரம்: 5' 3"
தகைமை/தொழில்:AAT
எதிர்பார்ப்பு: உள்நாடு மட்டும்
தொ.இ:G/13094

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


## Invitation for Bids (IFB)
## Maintenance & Service of Intercom Telephone system at Teaching Hospital – Jaffna for Year 2022/2023

1. The Chairman, Regional Procurement Committee invites sealed bids from eligible and experienced and reputed qualified Applicants for Annual Maintenance Services of NEC SVS 8100 IP PABX Intercom at Teaching Hospital, Jaffna, for the year 2022/2023 as described below.
2. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) method.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and bidder shall be registered under Telecommuni cation Regulatory Commission (TRC) for supply and maintenance of Communication Equipments and possess Business Registration for this purpose.
4. A Complete set of bidding documents in English language may be purchased by interested bidders from the Administrative Office of the Teaching Hospital - Jaffna, on working days between 09:00 a.m and 03:00 p.m from 2022-Oct-28 to 2022-Nov-10 on submission of a written request to the address below and payment of a non-refundable fee of Rs. 1,500.00 with the certified copy of the following documents.
   - A copy of the Business Registration Certificate
   - A copy of Telecommunication Regulatory Commission (TRC) license
5. The Intercom System can be inspected on working days between 09:30 a.m and 03:00 p.m up to 2022- Nov-10.
6. Sealed bids shall be deposited with duplicate in the tender Box made available at Director, Teaching Hospital, Jaffna or sent by registered post addressed to the Director, Teaching Hospital, Jaffna at the above address to reach him on or before **03.00 p.m on 2022-Nov-10.** Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders representatives who choose to attend at the above address.
7. All bids must accompanied a bid security issued by a reputable bank in Sri Lanka amounting for LKR 100,000.00 for the validity period of 119 days (upto 08.03.2023) the Bidder or one of his representatives is permitted to be present at the opening of the bids.
8. The Director, Teaching Hospital, Jaffna reserves the right to reject any or all Bids and the right to accept any portion of a bid, at any time prior to awarding of a contract without giving any reasons for such .Clients not bound to accept the lowest or any bids.
9. Interested eligible bidders may obtain further information from Hospital Secretary at Teaching Hospital, Jaffna. on working days between 9:00 a.m and 2:30 p.m
10. Pre-bid meeting will be held at **10.00 a.m on 2022-Nov-04** at Directors offices,Teaching Hospital, Jaffna.

**Director (Chairman),**
**Regional Procurement Committee,**
**Teaching Hospital, Jaffna.**

(c-5166)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நீங்கள் மகத்தான பணியைச் செய்யப் பிறந்தவர்கள் என்பதில் நம்பிக்கை வையுங்கள்.
~ விவேகானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இறைவா! உன்னை நான் சந்திக்க விரும்புகிறேன்

இறைவா! உன் திருவிளையாடலை நினைக்கும்போதெல்லாம் உன் நோக்கம் யாது? என்று யாம் நினைப்பது உண்டு.

இருந்தும் ஆக்குவாய். காப்பாய். அழிப்பாய். அருள் தருவாய். போக்குவாய் என்ற மணிவாசகரின் சிவபுராணம் உன் இயல்பை எடுத்தியம்பியபோது, ஏதோ நீ நினைத்தபடி தான் செய்வாய் என்று ஆறுதலடைவதுண்டு.

அதேநேரம் சிலவேளைகளில் உன் செயல் கண்டு உறங்காமல் இருந்தபொழுதுகளும் உள.

அதில் ராஜபக்ஷ தரப்புக்கு எதிராக தென் பகுதி மக்கள் கிளர்ந்தெழுந்து அவர்களை ஆட்சிப்பீடத்தில் இருந்து ஓட ஓடத் துரத்திய சம்பவத்தைப் பார்த்தபோது, அடேங்கப்பா உன்னோடு மிகக் கவனமாக இருக்க வேண்டும். நீ! காத்திருந்து காரியம் முடிப்பவன் என்றுணர்ந்தேன்.

ஆனால் பிரிட்டனின் பிரதமராக ரிஷி சுனக் பதவியேற்றபோது என்னபாடுபட்டும் உன்னை ஒருக்கால் சந்தித்தாக வேண்டும் என்று முடிவு செய்தேன்.

உன்னோடான என் சந்திப்பு வரம் கேட்பதற்காகவன்று.

மாறாக உன் திருவிளையாடலுக்கு ஒரு வாழ்த்துத் தெரிவிக்க வேண்டும் என்பதே என் சந்திப்பின் நோக்கம்.

இறைவா! பிரிட்டன் பிரதமராக பதவியேற்ற லிஸ் ரிரஸ் என்ற பெண்மணி 45 நாட்களில் பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்தார்.

அதனைத் தொடர்ந்து எந்த எதிர்ப்பும் இல்லாமல் ரிஷி சுனக் பிரிட்டனின் பிரதமராகப் பதவியேற்றார்

ரிஷி சுனக் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர். அதிலும் இந்து சமயத்தவர் எனும் போதுதான் இறைவா உன் திருவிளையாட்டின் உட்பொருள் உணர்ந்தேன்.

ஆம், இலங்கை, இந்தியா போன்ற நாடுகளை தன் குடியேற்ற நாடுகளாக வைத்திருந்த பிரிட்டன் பின்னாளில் அந்த நாடுகளுக்குச் சுதந்திரம் கொடுத்து அங்கிருந்து விடைபெற்றது.

ஆனால் இந்த நாடுகளை மிக நீண்ட காலம் தம் வசம் வைத்திருந்த ஆங்கிலேயர் சைவக்கோயில்களை உடைத்து அழித்தனர். தேவாலயங்களை நிறுவினர். இந்துக்களை கிறிஸ்தவத்துக்கு மதமாற்றம் செய்தனர்.

மதம் மாறினால் மட்டுமே உயர் கல்வி கற்கவும் உயர் பதவி பெறவும் முடியும் எனச் சட்டம் இயற்றினர்.

இவ்வாறெல்லாம் செய்தவர்கள் வேறு யாருமல்ல. முழுக்க முழுக்க கத்தோலிக்கம் சார்ந்த தூய ஆங்கிலேயர்கள்.

ஆக, அத்தகையவர்களின் நாடான பிரிட்டனில் ஓர் இந்துவை - ஓர் இந்திய வம்சத்தவரை பிரதமராக்கி வைத்தாய்.

என்னே! உன் அற்புதம். நீ நடிக்கும் நாடகத்தை கண்டு மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்தேன். கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பினேன்.

மதவெறி, இனவெறி எதுவும் உன்னிடம் வாய்க்காது என்ற உண்மை உணர்ந்தேன். மெய்ப்பொருள் உணர்ந்ததால் விரைந்து உன்னைச் சந்திக்க விரும்புகிறேன். ஆவன செய்க.

# வடக்கில் போதைக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குக

## அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

வடக்கில் போதைப் பொருள் பாவனைக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

வடக்கில் போதைப் பொருள் பாவனை அச்சுறுத்தும் வகையில் அதிகரித்து வருவதாக அண்மைய தகவல்கள் வெளிப்படுத்தி வருகின்றமை தொடர்பில் தீவிர கவனம் செலுத்தப்பட வேண்டுமென அமைச்சர் கூறியுள்ளார்.

மேலும், வடக்கில் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகின்றவர்களை நல்வழிப்படுத்துவதற்கான புனர்வாழ்வு நிலையம் ஒன்று வடக்கு மாகாணத்தில் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்வைத்துள்ளார்.

போதைப் பொருள் பாவனை குற்றச்சாட்டின் அடிப்படையில், நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படுகின்ற சந்தேக நபர்களை, சிறைச்சாலைகளுக்கு அனுப்பாமல், புனர்வாழ்வு நிலையங்களில் தடுத்து வைப்பதற்கான சட்ட ஏற்பாடுகளை நீதவான் நீதிமன்றுக்கு வழங்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வு காணும் வகையில் அமைக்கப்பட்டுள்ள அமைச்சரவை உப குழுவின் முதலாவது கலந்துரையாடலில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்த விடயங்களை முன்வைத்துள்ளார். (ம-7)

## கோண்டாவிலில் கசிப்புக்கான உபகரணங்கள் மீட்பு

கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பலாலி வீதி, கோண்டாவில் பகுதியில் இருந்து 60 லீற்றர் கோடா மற்றும் கசிப்பு காய்ச்சுவதற்கு பயன்படுத்தும் உபகரணங்கள் என்பன நேற்று மீட்கப்பட்டுள்ளன.

கோப்பாய் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் கோப்பாய் பொலிஸாரால் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

தொழிற்சாலை ஒன்றினை நடாத்துவது போல் பாவனை செய்து குறித்த பகுதியில் இவ்வாறு கசிப்பு காய்ச்சும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வந்தது.

பொலிஸாரின் சுற்றிவளைப்பின்போது சந்தேக நபர் தப்பிச் சென்ற நிலையில் குறித்த பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,104)

## யாழில் 15 வயது சிறுமியுடன் குடும்பம் நடத்திய இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

15 வயதுச் சிறுமி ஒருவருடன் குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்ட, பிரான்ஸில் இருந்து வந்த 20 வயது இளைஞன் ஒருவரையும் குறித்த சிறுமியையும் காங்கேசன்துறை விசேட மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் நேற்று கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

கல்வியங்காடு பகுதியைச் சொந்த இடமாகக் கொண்டு, பிரான்ஸில் வசித்து வந்த இளைஞனுக்கும், அச்சுவேலியை பகுதியைச் சேர்ந்த குறித்த சிறுமிக்குமிடையே காதல் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் யாழ்ப்பாணத்திற்கு வந்த இளைஞன் 15 வயதுக் காதலியை திருமணம் செய்துகொண்டு தலைமறைவாயிருந்தார். இந்நிலையில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் குறித்த சம்பவம் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் சிறுமியையும் குறித்த இளைஞனையும் நேற்று கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞனை அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தவுள்ளதுடன், சிறுமியை மருத்துவ பரிசோதனைக்கு அனுப்பி வைக்கவுள்ளதாக காங்கேசன்துறை விசேட மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர். (ம-7,104)

## தெல்லிப்பழையில் தனிமையில் வசித்த பெண்ணிடம் கொள்ளை சந்தேகநபர் கைது

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பகுதியில் தனிமையில் வசித்து வந்த 55 வயது பெண்ணின் 1 1/2 பவுண் சங்கிலி மற்றும் அரைப் பவுண் மோதிரம் என்பவற்றை கொள்ளையடித்த குற்றச்சாட்டின் கீழ் சந்தேகநபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கிளிநொச்சியை சொந்த இடமாகக் கொண்டவர் எனவும் திருமணம் செய்த நிலையில் தற்போது தெல்லிப்பழை பகுதியில் வசித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஒன்றரை மாதத்திற்கு முதல் குறித்த சம்பவம் இடம்பெற்ற நிலையில் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில், பாதிக்கப்பட்ட குறித்த பெண்ணினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. எனினும் சந்தேகநபர் தலைமறைவாகி இருந்ததனால் அவரை கைது செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் இச்சம்பவமானது காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவினரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. அதனடிப்படையில் காங்கேசன்துறை பிராந்திய புலனாய்வு பிரிவினரின் தகவலுக்கு அமைவாக, காங்கேசன்துறை விசேட மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் குறித்த நபரை நேற்று கைது செய்தனர்.

(ம-7,104)


## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **மன்னார் பிரதேசத்தில்** அந்தோனிப்பிள்ளை ஐஸ்தொழிற்சாலை, ஆவே மரியா ஐஸ் தொழிற்சாலை, கூல் மென் ஐஸ் தொழிற்சாலை, எருக்கலம்பிட்டி நீர் வழங்கல் திட்டம், கீரி ஐஸ் தொழிற்சாலை, தொழிற்பேட்டை, கச்சேரி வளாகம், மன்னார் மருத்துவமனை, [illegible] நீர் வழங்கல் [illegible] உப்பு உற்பத்தி நிலையம், கடற்படை முகாம்- ஓலைத்தொடுவாய், புதிய சில்க் ரோடு அகுடிக் கம்பெனி பிரைவேட் (லிமிடெட்) (கடல் உணவு களஞ்சியம்), பெரிய கரைசல்பல்மெய்ரா ஹவுஸ், பல்மெய்ரா ஹவுஸ்- தலைமன்னார், தப்ரோபேன் உறைந்த உணவு (இறால் பண்ணை), எருக்கலம்பிட்டி, மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், தலைமன்னார் வைத்தியசாலை, தலைமன்னார் கடற்படை முகாம், ரைமக்ஸ் ஆடை, வங்காலைப்பாடு சென்ட் லார்ட்ஸ் ஐஸ் தொழிற்சாலை, நீர் வழங்கல்- தொடர்பகம், இளைஞர் [illegible] பயிற்சி மையம், கார்கில்ஸ் பூட்சிட்டி-மன்னார், இலங்கை போக்குவரத்து சபை-மன்னார், டயலொக், தள்ளாடி, நடுக்குடா, பேசாலை - ஐஸ் தொழிற்சாலை- தள்ளாடி, மன்னார் நகரம், கொன்வென்ட் வீதி, எழுத்தூர் எமில்நகர், எருக்கலம்பிட்டி, எரிபொருள் நிரப்பு நிலையத்தடி- 4 ஆவது மைல் கல், ஜோசப்வாஸ் நகர், கடலேரி வீதி, கட்டுகாரங்குடியிருப்பு, கரைசல் திட்டம், கீழியங்குடியிருப்பு, கொன்னையன் குடியிருப்பு, குருசுபாடு கடற்படை முகாம், மாறுவாடி சந்தி, மன்னார் நகரம் இலங்கை மின்சார சபையடி, மூர் வீதி, முள்ளிப்பள்ளம், நளவன்பாடி புதுத்தெரு (பள்ளிமுனை), ரைமக்ஸ் ஆடையகம்அருகில், இளையோர் சேவை மையத்தடி, ஓலைத்தொடுவாய், ஒல்லிமோட்டை, படப்பாடி நீர் வழங்கல், பள்ளிமுனை, பருத்திப்பண்ணை, பாலிலுப்பட்டான் குடியிருப்பு, பெரியகரைசல், பேசாலை, புதுக்குடியிருப்பு, புகையிரத நிலையம்- சாந்திபுரம், சிலாவத்தை முகாம் சந்தி, சிறுநாவற்குளம், சிறுதோப்பு, சவுத்பார் இராணுவ முகாம், மன்னார் ஸ்ரீலங்கா டெலிகாம், புனித செபஸ்டியன் தேவாலயம், சணி கிராமம், தலைமன்னார், தலைமன்னார் கப்பல் வீடமைப்பு திட்டம், தலைமன்னார் புகையிரத நிலையம், தாழ்வுப்பாடு, தாராபுரம், தாராபுரம் திட்டம், தரவன்கொட்டு, தோட்டவெளி, துள்ளுகுடியிருப்பு தும்பு தொழிற்சாலை, துள்ளு குடியிருப்பு திட்டம், யு.சி மைதானம், மன்னார் வங்காலைப்பாடு ஆகிய இடங்களிலும் மின்சாரம்தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவு.புளியங்குளத்தில் தடம்புரண்டது பாரவூர்தி

## சாரதி மருத்துவமனையில்



(நெளுக்குளம்)

வவுனியா புளியங்குளத்தில் இடம்பெற்ற பாரவூர்தி விபத்தில் சாரதி படுகாயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கண்டியில் இருந்து யாழ். நோக்கிச் சென்ற பாரவூர்தி வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்தில் பாரவூர்தி சாரதியான அம்பத்த பகுதியைச் சேர்ந்த 38 வயதுடையவரே காயமடைந்துள்ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணை வவுனியா புளியங்குளம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (4-299)

# ஓ.எம்.பி அலுவலகத்தால் அனுப்பப்பட்ட கடிதங்கள் உறவுகளால் தீக்கிரை

(குருமன்காடு)

அரசாங்கத்தின் காணாமல் போன ஆட்கள் தொடர்பான அலுவலகத்தால் அனுப்பப்பட்ட கடிதங்கள் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் தீக்கிரையாக்கப்பட்டன.

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நீதி கோரி காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் வவுனியா ஏ9 வீதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபை முன்பாக நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு அரசாங்கத்தின் காணாமல் போன ஆட்கள் தொடர்பான அலுவலகத்தால் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான மேலதிக விபரங்கள் கோரி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த அலுவலகத்தை தாம் நிராகரிப்பதாகவும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட சர்வதேச தலையீட்டின் மூலமே காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நீதி கிடைக்கும் எனத் தெரிவித்து குறித்த கடிதத்தை கிழித்து அதனை தீக்கிரையாக்கினர். (4-250)

# அமெ.துணைத் தூதர் மன்னாருக்கு விஜயம்



(மன்னார்)

மன்னாரிற்கு திங்கட்கிழமை விஜயம் மேற்கொண்டு வருகை தந்த இலங்கைக் கான அமெரிக்க துணைத் தூதர் டக் சோனெக் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். குறித்த சந்திப்பு திங்கட் கிழமை மன்னார் பிரஜைகள் குழுவின் அலுவலகத்தில் இடம் பெற்றுள்ளது. குறித்த சந்திப்பில் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.ஞானப்பிரகாசம் அடிகளார்,பிரஜைகள் குழு உறுப்பினர்கள்,மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் ஒன்றிய பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

குறித்த மன்னார் மாவட்டத்தின் தற்போதைய நிலவரம் சமகால நிலைமைகள் தொடர்பாக அமெரிக்க துணைத் தூதர் கேட்டறிந்து கொண்டார். (4-285)

# வவுனியா மாவட்டத்தில்

# போதைப் பாவனையை தடுக்க விசேட தொலைபேசி இலக்கம்

(நெளுக்குளம்)

வவுனியாவில் போதைப் பொருள் பாவனை மற்றும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்த விசேட அதிரடிப்படையினர் களமிறக்கப்பட்டுள்ளதோடு வவுனியாவிற்குரிய விசேட தொலைபேசி இலக்கங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அந்தவகையில் போதைப் பொருள் வியாபாரம், போதைப்பொருள் பாவனை, குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்கள் தொடர்பான தகவல் 071 859 2378, 011 258 0518 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. (4-299)

# போதையை கட்டுப்படுத்த விசேட அதிரடிப்படையினர்

(குருமன்காடு)

வவுனியாவில் போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த விசேட அதிரடிப்படையினர் களமிறக்கப்படவுள்ளனர்.

வடமாகாணத்தின் யாழ்ப்பாண மாவட்டத்தில் போதைப் பொருள் பாவனை இளைஞர்கள் மத்தியில் அதிகரித்துள்ள நிலையில் யாழ்ப்பாணத்தில் மருந்து விற்பனை நிலையங்கள் மீது உணவு மற்றும் மருந்து பரிசோதகர்கள் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது வவுனியாவில் உள்ள மருத்துவர் ஒருவர் தனது தனியார் மருத்துவமனையின் பெயரில் போதை மாத்திரைகளை கொள்வனவு செய்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இதனையடுத்து வவுனியா மாவட்ட பிராந்திய சுகாதார திணைக்களத்தின் உத்தரவுக்கமைய விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன.

இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள் கடத்தல், போதைப்பொருள் விற்பனை, போதைப்பொருள் பாவனை என்பவற்றைக் கட்டுப்படுத்த விசேட அதிரடிப் படையினர் களமிறக்கப் பட்டுள்ளனர்.

வவுனியாவிலும் போதைப் பொருள் பாவனை அதிகரித்துச் செல்வதாக வெளியாகி வரும் தகவல்களையடுத்து வவுனியாவில் போதைப் பொருள் கட்டுப்படுத்தல் நடவடிக்கைக்காக விசேட அதிரடிப் படையினர் களமிறக்கப்படவுள்ளனர்.(4-250)

# அறிவித்தல்

## பிரதேச சபை, சாவகச்சேரி

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டம் பிரிவு 168 இற்கு இணங்க சாவகச்சேரி பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சித் திட்ட வரவு செலவுத்திட்ட முன்மொழிவானது பிரதேச சபையின் தலைமை அலுவலகம் மற்றும் அதன் உபஅலுவலகங்களில் பொதுமக்கள் கருத்தாய்விற்காக 2022.10.28 தொடக்கம் 2022.11.10 திகதி வரை அலுவலக நேரங்களில் காட்சிப்படுத்தப்படவுள்ளது என்பதனை இத்தால் சகலருக்கும் அறியத் தருகிறேன்.

இது தொடர்பிலான மாற்று முன்மொழிவுகள் ஏதும் இருப்பின் 11.11.2022 ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு முன்னர் தலைமை அலுவலகம் மற்றும் அவ்வவ் உபஅலுவலகங்களில் நேரடியாக சமர்ப்பிக்கலாம்.

**தவிசாளர்,**
**பிரதேச சபை,**
**சாவகச்சேரி.**

(சி-5160) 28.10.2022

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 360 | 400 | 350 | 320 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 180 | 250 | 250 | 250 |
| தக்காளி | 350 | 300 | 350 | 320 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 160 | 140 | 240 |
| கோவா | 320 | 250 | 280 | 350 |
| கரட் | 350 | 400 | 400 | 450 |
| பூசணி | 200 | 200 | 200 | 200 |
| புடோல் | 250 | 250 | 180 | 200 |
| வாழைக்காய் | 200 | 140 | 140 | 150 |
| சின்ன வெங்காயம் | 480 | 400 | 550 | 500 |
| பெரிய வெங்காயம் | 260 | 250 | 220 | 300 |
| பாகற்காய் | 700 | 600 | 600 | 800 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 120 | 240 |
| கருணைக் கிழங்கு | 180 | 140 | 140 | 200 |
| பயற்றங்காய் | 600 | 600 | 550 | 450 |
| லீக்ஸ் | 120 | 320 | 280 | 350 |
| பீற்றூட் | 250 | 250 | 260 | 280 |
| கறிமிளகாய் | 500 | 600 | 700 | 750 |
| முருங்கைக்காய் | 600 | 400 | 450 | 400 |
| போஞ்சி | 400 | 350 | 400 | 480 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | — | 300 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 120 | 140 |
| தேசிக்காய் | 600 | 600 | 600 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 65 | 70-90 |
| இராசவள்ளி | 250 | 250 | 250 | 250 |
| வெங்காயப்பூ | 550 | 400 | — | — |
| முள்ளங்கி | 140 | 150 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 30 | 20 | 40 | 50 |
| ஈரப்பலா | 120 | 120 | 80 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய பல்கலை...

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இது குறித்து நேற்று பிரதமர் தினேஸ் குணவர்த்தன மற்றும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஆகியோருடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் பிரஸ்தாபிக்கப்பட்ட நிலையில், குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து இந்தியாவில் தங்கியிருந்த காலப் பகுதியில், இந்திய பல்கலைக்கழகங்களில் கல்வி கற்று பட்டதாரிகளானவர்கள், யுத்தம் நிறைவடைந்த பின்னர் தங்களின் சொந்த இடங்களுக்கு திரும்பியுள்ளனர்.

அவ்வாறானவர்கள் அண்மைக் காலங்களில் இடம்பெற்ற அரச சேவைக்கான பட்டதாரிகள் ஆட்சேர்ப்புகளின் போது, வெளிநாட்டு பட்டதாரிகள் என்ற அடிப்படையில் நிராகரிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டதாரிகளை அரச சேவையில் உள்ளீர்ப்பதற்கு பிரதமர் மற்றும் கல்வி அமைச்சர் ஆகியோர் தீர்மானித்துள்ளனர். (ம-7,33)

## றோஸ் பாணுக்...

இருந்து மூன்று குண்டூசிகள் மீட்கப்பட்டுள்ளன.

அச்சுவேலி பகுதியில் உள்ள கடை ஒன்றில் நேற்றைய தினம் வியாழக்கிழமை, குடும்பஸ்தர் ஒருவர் றோஸ் பாண் வாங்கியுள்ளார். அந்த பாணை வீட்டுக்குக் கொண்டு சென்று தமது சிறு பிள்ளைகளுக்கு வழங்கிய போதே, பாண் ஒன்றினுள் மூன்று குண்டூசிகள் காணப்பட்டுள்ளன.

அது தொடர்பில் அப்பகுதி பொது சுகாதார பரிசோதகருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து சுகாதார பரிசோதகர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளார். (ம-7,33)

## பல்கலை...

எனவும் மற்றைய இருவரும் சகோதரர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை குறித்த மாணவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் மாணவர்களுக்கு போதைப்பொருளை விற்பனை செய்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கலட்டி சந்திக்கு அருகில் மாணவர்களுக்கு போதைப்பொருள் விற்பனை செய்யப்படுவதாக தகவல் கிடைத்துள்ளது.

அதன் அடிப்படையில் அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸ் குழுவினர் நடத்திய சோதனை நடவடிக்கையில், ஹெரோயின் மற்றும் கஞ்சா போதைப் பொருளுடன் மூன்று மாணவர்களை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மாணவர்களில் இருவர் சகோதரர்கள் எனவும், அவர்கள் இருவரும் நல்லூர்ப் பகுதியை சேர்ந்தவர்கள் எனவும், மற்றையவர் பதுளையை சேர்ந்த பெரும்பான்மையினத்தை சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் கைது செய்யப்பட்ட மாணவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் குறித்த மாணவர்களுக்கு போதை பொருளை விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஆனைக்கோட்டை பகுதியை சேர்ந்த 22 மற்றும் 26 வயதுடைய இரு இளைஞர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ம-7,104)

## நிதி அமைச்சுப்...

பிரிவு 44 (3) இல் அமைச்சுக்கு ஒருவர் நியமிக்கப்படவில்லை என்றால் ஜனாதிபதி அந்த அமைச்சின் செயற்பாடுகளை 14 நாட்களுக்கு மட்டுமே மேற்கொள்ள முடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், ஜனாதிபதி தற்போது பாதுகாப்பு அமைச்சர் பதவிக்கு மேலதிகமாக நிதியமைச்சர் பதவியையும் வகிக்கின்றார். எனவே 22ஆவது அரசியல் அமைப்பின் பிரகாரம் நிதி அமைச்சு பதவியை இழக்கும் நிலை ஏற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## நாட்டை மீட்க...

கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ம-7)

## புலோலியில்...

ழக்கிழமை மாலை இவ்வாறு தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன.

மாலை வேளையில் வீட்டில் யாரும் இல்லாத வேளையில் வீட்டின் கூரை ஓட்டினைக் கழற்றி உள்ளிறங்கிய திருடர்கள், வீட்டினை சல்லடை போட்டு தேடுதல் நடத்தி அங்கிருந்த 35 பவுண் தங்க நகைகளை திருடிச் சென்றுள்ளனர்.

வீட்டை விட்டு வெளியில் சென்றவர்கள் வீட்டின் கதவு திறந்திருப்பதை பார்த்து அதிர்ச்சியுற்று வீட்டினுள் சென்று பார்த்தபோதே வீட்டில் வைக்கப்பட்டிருந்த நகைகள் திருடப்பட்டமை தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-7,60)

## எந்தத் தேர்தலை...

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் மூன்றாவது கட்சி கூட்டம் "சாம்பலில் இருந்து எழுவோம்" என்ற தொனிப் பொருளின் கீழ், முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று புத்தளம் ஆரச்சி கட்டுவ பிரதேசத்தில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்கள் இனம், மதம் என வேறுபட்டு செயற்பட்டால் தற்போதைய பொருளாதார நெருக்கடி தீவிரமடையுமே தவிர குறைவடையாது.

இதன் காரணமாகவே ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன 'மீண்டும் ஒன்றிணைந்து எழுவோம்' என்ற தொனிப் பொருளின் கீழ், புத்தளம் மாவட்டத்தில் கட்சி மாநாட்டை நடத்துவதற்கு தீர்மானித்தது.

பொருளாதார பாதிப்பு சகல தரப்பினருக்கும் தாக்கம் செலுத்தியுள்ளது.

கொரோனா பெருந்தொற்று தாக்கத்திலிருந்து மக்களை பாதுகாக்க அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட்டது. நாட்டு மக்களின் சுகாதாரத்துக்கு முன்னுரிமை வழங்கினோம் என்பதை உறுதியுடன் குறிப்பிட முடியும் என்றும் தெரிவித்துள்ளார். (ம-7)

## வாள்...

நீதிமன்றுக்கு சென்று திரும்பிய வேளை அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தீபாவளி தினமான கடந்த திங்கட்கிழமை இணுவில் வீதியில் சென்ற 17 வயதுடைய ஒருவரை வழிமறித்த நால்வர் வாள்வெட்டுத் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பித்தனர்.

பொலிஸாரினால் தேடப்பட்டு வந்த குறித்த நபர் நேற்று பிற்பகல் நீதிமன்றிலிருந்து வெளியேறிய நிலையில் கைது செய்யப்பட்டதுடன் வாள் ஒன்றும் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் கூறினர். (ம-7,33,104)

## ஆணைக்குழுக்...

மளிப்பதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.

நிறைவேற்று அதிகாரப் பயன்பாட்டிற்கு 19ஆவது திருத்தச் சட்டத்தில் கொண்டுவரப்பட்ட பல கட்டுப்பாடுகளும் சமநிலைகளும் 20ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் நீக்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

### தன நிதானய

திகதி - 2022.10.27
சீட்டிழுப்பு இலக்கம் - 951
ஆங்கில எழுத்து: K — வெற்றி இலக்கங்கள்: 03 10 31 47

### மஹஜன சம்பத

திகதி 2022/10/27
சீட்டிழுப்பு இலக்கம் 4921
ஆங்கில எழுத்து: O — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 8 5 1 7 6 3
தேசிய லொத்தர் சபை

### HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.10.27
சீட்டிழுப்பு இலக்கம் 230
துலாம் 02 37 45 51 துலாம்
1449665 0583546
33498 1314630 1528207 1426566

### மெகா பவர்

திகதி 27/10/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1269
W 19 07 16 30 69

### கொவிசெத

திகதி 2022.10.27 — சீட்டிழுப்பு இலக்கம் 3163
ஆங்கில எழுத்து: Z — வெற்றி இலக்கங்கள்: 06 51 59 73
தேசிய லொத்தர் சபை

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 27/10/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1376
வெற்றி இலக்கங்கள்: சிம்மம் 7 4 9 6 9 3
தேசிய லொத்தர் சபை

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1896 — நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2022.10.27 — தினம் வியாழக்கிழமை
J 21 28 43 54
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,702,980/-

### சனிதா

வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.10.27
சீட்டிழுப்பு இல : 4057
வர்ணம் : சிவப்பு
ரூ. 4,512,260/-
வெற்றி இலக்கங்கள்: 37 48 66 72 — N

### ராசி

திகதி 2022-10-27
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/-
வெற்றி வாரம் 3608
வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள்: 02 05 46 57 — விருச்சிகம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 7,712,080/-

### ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்

L 11 19 22 55 58
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 272,644,331.80
சீட்டிழுப்பு வாரம் 1072
வர்ணம் செம்மஞ்சள்
2022.10.27 வியாழக்கிழமை
011-2 333 546-47
Web: www.dlb.lk

### சம்வர்தன வாசனாவ

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 539 — திகதி 2022-10-27 — வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து: C — வெற்றி இலக்கங்கள்: 25 47 56 — விதி எண்: 04
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 13,692,056/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

### அத கோடிபதி

வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1722
வர்ணம் : கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2022.10.27
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,971,960/-
வெற்றி இலக்கங்கள்: 35 52 56 64 — T

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சர்வதேச சமூக...

ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக் குழுவிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பு குறித்து கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தனது டுவிட்டர் கணக்கில் பதிவிட்டுள்ளார்.

அதில், மனித உரிமைகள், பொருளாதார மீட்பு, GSP+ வரிச்சலுகை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கான தேர்தல்கள் மற்றும் பிற தொடர்புடைய பிரச்சினைகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பின் போது, புதிய அரசியல் சாசனத்தை உருவாக்கவுள்ளதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளமை நம்பகரமான விடயம் அல்லவென தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இதனால் சர்வதேச சமுகம் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க முன்வர வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் மனித உரிமைகள், பொருளாதார மீட்பு, GSP+ வரிச்சலுகை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கான தேர்தல்கள் மற்றும் பிற தொடர்புடைய பிரச்சினைகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## நாட்டில் இன்று மின்வெட்டு அமுல்

நாட்டில் இன்று வெள்ளிக்கிழமைக்கான மின்வெட்டு நேர அட்டவணையை இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

இதன்படி, 2 மணித்தியாலங்கள் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபை முன்வைத்த கோரிக்கைக்கு அமைய, இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (13267)

076 825 7716 (ஆகாஸ்)



**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் புத்தூரில்**
**114 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- மூன்று பரப்பாகவும் நான்கு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- 18 அடி பாதையுடன், நன்னீர் ஊற்று நிலம், நல்ல சூழல்
- 775 வழி பேருந்துகள் செல்லும் காபெட் வீதி
- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபெட் விதி அருகாமையில்
- புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 km தூரம் (சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து)
- ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சம் மட்டும்.

(தரகர் தேவையில்லை, பார்வையிடும் நேரம் 8.00 am - 5.30 pm) (13275)

தொடர்பு- 076 755 8606, 074 318 7263



**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தில்**
**12 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு**

- ஓட்டுமடம் சந்தியிலிருந்து அராலி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன் (காரைநகர் செல்லும் பிரதான காபெட் வீதி)
- யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்டது.
- 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்.பஸ் நிலையத்திலிருந்து 1½km தூரம்.
- பார்வையிடும் நேரம் :- காலை 8.00 - மாலை 5.30

**1 பரப்பின் விலை - 600,000/=** (13275)

தொடர்பு- 077 874 8135, 077 408 2649



**VISA விண்ணப்பங்கள்**

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-5159)

STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS

0777-068-777



**அமெரிக்க லொத்தர் இலவச விசா**

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

Passport அவசியமில்லை

55'000 விசா
இலங்கையர்களுக்கு அதிக வாய்ப்புக்கள்

நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பாக அமையும்

இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்கா சென்றுள்ளார்கள்

ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

இந்த வருடம் வருகிறவர்களும் விண்ணப்பிக்கலாம்

வெளிநாட்டு உறவு இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரியசந்தர்ப்பம்

எமூடாக விசா வென்ற வெற்றிக்களைகளை எமது V2 Travels and Tours என்ற Facebook பக்கத்தில் பார்வையிடலாம். (C-5159)

V2 Travels 0768226240 0768226244


# 25ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
29 . 06 . 1932



மறைவு
03 . 11 . 1997

## அமரர் நவரத்தினசாமி குருசாமி

திதி – 28.10.2022

அன்புடனும் பண்புடனும் - எங்களை
வழிப்படுத்திய - எம்
அன்புத் தெய்வமே - நீங்கள்
மறைந்து இருபத்தைந்து
ஆண்டுகள் ஆனாலும் - உங்கள்
நினைவலைகள் - எம்
நெஞ்சை விட்டு அகலாது

**உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.**

கும்பளாவளை,
அளவெட்டி.

பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

(13261)

# கண்ணீர் அஞ்சலி



மண்ணில் 13.04.1959 | விண்ணில் 26.10.2022

எமது சக ஊழியர் திருமதி மாதுஷா ஆதவன் அவர்களின் அன்புத் தாயார்

**அமரர்**
## சத்தியரூபராணி மகேந்திரன்

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆயவுடன்...

PEOPLE'S BANK

முகாமையாளரும் ஊழியர்களும்
மக்கள் வங்கி, யாழ். பிரதான வீதிக்கிளை.
உரும்பிராய் சேவை நிலையம்.

(13273)


**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன்**
**3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)**

- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

**பார்வையிடும் நேரம்**
காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை

தரகர் தேவையில்லை (13252)

தொடர்புகளுக்கு - ஜெயம்
077 986 5457, 077 814 7389


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, ... வீதி, ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.